# Chapter XXIII Code of Criminal Procedure

## IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUCHIRAPPALLI

Deposition of Witnesses : அசா 17

**S.C.No. 174/2024**

| | | |
|---|---|---|
| Name | : | வீரசோலை |
| Father's Name | : | ஆண்டி |
| Village | : | காவல் கட்டுப்பாட்டு அறை |
| District | : | திருச்சி மாநகரம் |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 60 |
| Date | : | 10/08/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 10.08.2026

**1 மற்றும் 2 எதிரிகள் வேறு வழக்கில் சிறையில் உள்ளனர். 3, 6 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4 வது எதிரி ஆஜர். 5 ம் எதிரி இறப்பு. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருச்சி மாநகர காவல் கட்டுப்பாட்டு அறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 12.09.2023 அன்று கன்டோன்மென்ட் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது, ஆஜரில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது திரு.ராஜாகிருஷ்ணகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவைப் பெற்று கன்டோன்மென்ட் காவல் நிலைய குற்ற எண் 1584/2023 சட்டப்பிரிவுகள் 392, 397 இதச வாக பதிவு செய்திருந்தார்.

2. நான் அந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் ராஜாகிருஷ்ணகுமார், ஜெயினுலாபுதீன், ராஜேந்திரன், நியாஸ், தேவேந்திரன் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமச்சந்திரன், செல்வம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அதசாஆ 24** ஆகும். **மாதிரி வரைபடம் அதசாஆ 25** ஆகும். அன்றைய தினம் மாலை ஷாஜஹான் என்பவருக்கு மருத்து நமூனா கொடுத்து சிறப்பு உதவி ஆய்வாளர் நெடுமாறன் அவர்கள் மூலம் திருச்சி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தேன்.

3. 13.09.2023 அன்று அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த ஷாஜஹான் மற்றும் முகமது அஸ்கர், ஜெயக்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சூர்யா க/பெ. இளையராஜா என்பவரை விவேகானந்த நகர், முத்தரசநல்லூர் சென்று மேலும் என்னுடன் பெண் சிறப்பு உதவி ஆய்வாளர் விஜயா என்பவருடன் சென்று முத்தரசநல்லூர் விவேகானந்த நகரில் உள்ள எதிரியின் வீட்டிற்கே சென்று அவரை காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது அவர் எவ்வித அச்சுறுத்தலும் ஆசை வார்த்தையும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மணிகண்டன், மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் 16.15 மணி முதல் 17.15 மணி வரை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மிட்டாய் பாபு தன்னிடம் கொடுத்த ரூ.1 லட்சம் பணமும் பதிவெண் இல்லாத Yamaha R15 Blue Colour பைக்கையும் எடுத்து ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலத்தில்

கூறியிருந்தார். அதன் பேரில் அவர் மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.1 லட்சத்தையும் குற்றச் சம்பவத்தில் ஜாகீரும், மிட்டாய் பாபுவும் பயன்படுத்தியதாக சொல்லி ஆஜர் செய்த R15 Blue Colour Bike ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் 17.15. மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். **திருமதி.சூர்யா (3 வது எதிரி) என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ 26** ஆகும். **கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ 27** ஆகும்.

4. அதன்பின்பு அன்றைய தினம் 13.09.2023 ம் தேதி 18.15 மணிக்கு மேற்படி சூர்யா என்பவரை நிலைய பொறுப்பில் ஒப்படைத்து விட்டு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி அன்றைய தினம் 13.09.2023 ம் தேதி 19 மணிக்கு பாலக்கரை பிரபாத் ரவுண்டானா அருகில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பவர்களாக கருதப்பட்ட எதிரிகள் அன்சாரி மற்றும் வினோத்குமார் (எ) பில்லா (இறந்துபோன 5 வது எதிரி) ஆகியோரை கைது செய்து 19.30 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்து அன்றைய தினமே 13.09.2023 அன்றே சூர்யா, அன்சாரி, வினோத்குமார் ஆகியோரை நீதிமன்றக் காவலுக்கு தக்கவழிக்காவல் மூலம் உட்படுத்தினேன். மேலும் இது தொடர்பாக புலன் விசாரணை செய்து 25.09.2023 அன்று 18 மணியளவில் நீதித்துறை நடுவர் எண். 2 ன் உத்தரவின் படி 4 நாட்கள் சூர்யா என்பவரை உத்தரவாதம் கொடுத்து போலிஸ் காவலில் எடுத்து விசாரணை செய்தேன். அதன்பின்பு 27.09.2023 ம் தேதி 12 மணி முதல் 13 மணி வரை மேற்படி சூர்யா என்பவரை விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக அச்சுறுத்தலோ ஆசைவார்த்தையோ இன்றி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த நேரத்தில் அந்த சமயத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால்

போலிஸ் சாட்சிகளான கன்டோன்மென்ட் குற்றப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.காமராஜ், சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன்.

5. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னிடம் மிட்டாய்பாபு என்பவர் கொடுத்து வைத்திருந்த பணம் ரூ.5 லட்சத்தை பக்கத்து வீட்டில் உள்ளவரான திருமதி.கோகிலா என்பவரிடம் கொடுத்து மறைத்து வைக்க சொல்லியிருப்பதாக கூறினார். அதன்பேரில் எதிரி சூர்யாவின் வீட்டிற்கு அருகில் இருநத் திருமதி. கோகிலா என்பவர் மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எதிரி சூர்யா எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.5 லட்சத்தை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் காமராஜ், ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அதசாஆ 10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ 11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிரியை 15.30 மணிக்கு காவல்நிலையம் அழைத்து வந்து 27.09.2023 அன்றே அவரை மறுபடியும் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினேன்.

6. மற்ற எதிரிகளை தேடிவந்த நிலையில் 29.09.2023 அன்று போக்குவரத்து புலனாய்வு பிரிவில் பணி செய்து வந்த தலைமை காவலர் ரமேஷ் என்பவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 2 வது எதிரியான பாபு(எ) மிட்டாய்பாபு சாலை விபத்திற்குள்ளாகி திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கூறிய தகவலைப் பெற்று புகார்தாரர் ராஜாகிருஷ்ணகுமார் என்பவரையும் அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றேன். மேலும் ராஜேஷ் மற்றும் சுரேஷ் என்பவர்கள் உடன் வந்தார்கள். அவரை 9 மணிக்கு காரணம் கூறி கைது செய்து

விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக எவ்வித அச்சுறுத்தலும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உடனிருந்த சாட்சிகள் ராஜேஷ், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் 9.15 மணியளவில் பதிவு செய்தேன்.

7. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வடக்கு தாராநல்லூரில் வசிக்கும் தனது மாமியார் தமிழ்ச்செல்வி என்பவரிடம் பணத்தை கொடுத்து மறைத்து வைக்கச் சொல்லியிருப்பதாகவும் தன்னை அழைத்துச் சென்றால் மறைத்து வைத்துள்ள இடத்திலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அதன் பேரில் அன்றைய தினம் 11.15 மணிக்கு பாபுவின் மாமியார் வீடான தமிழ்ச்செல்வி என்பவரின் வீடான வடக்கு தாராநல்லூர், காமராஜ் நகர் சென்று அங்கு எதிரி மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.20,60,000/–ஐ சாட்சிகள் ராஜேஷ், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ 28** ஆகும். **கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ 29** ஆகும்.

8. அதன்பின்பு இந்த வழக்கில் சம்மந்தப்பட்டமற்றொரு எதிரியான ஜாகிர் உசேன் (1வது எதிரி) என்பவர் சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் சரண்டராகி புழல் சிறையில் இருக்கிறார் என்ற தகவலைப் பெற்று 04.10.2023ம் தேதி 17 மணிக்கு மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2, திருச்சி அவர்களின் உத்தரவின் படி எதிரி ஜாகிர் உசேனை 1நாள் போலிஸ் காவலில் எடுத்து 19.15 மணிக்கு காவல்நிலையம் கொண்டு வந்தேன். மறுநாள் 05.10.2023ம் தேதி மேற்படி புகார்தாரரை அழைத்து விசாரித்தபோது அவர் எதிரி ஜாகிர் உசேனை அடையாளம் காட்டி மறு வாக்குமூலம் அளித்தார். அதனை காவல்நிலையத்தில் வைத்து பதிவு

செய்தேன். அதன்பின்பு 05.10.2023ம் தேதி 7 மணி முதல் 8 மணி வரை எதிரி ஜாகிர் உசேன் தன்னிச்சையாக எவ்வித அச்சுறுத்தலும் ஆசை வார்த்தையும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராஜேஷ், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன்.

9. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி குண்டுர் குளத்தின் அருகில் வழக்கு சம்பவத்தில் அவர் பயன்படுத்தியதாக கூறி மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் செய்த வீச்சரிவாள் ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 8.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் ஜாகிர் உசேன் உக்கடை அரியமங்கலம் மில் காலனி தீப்பெட்டி கம்பெனி தெரு என்ற அவரது வீட்டிலிருந்து தானாக எடுத்து ஆஜர் செய்த 1. பணம் ரூ.2,50,000/- மற்றும் எடமலைப்பட்டிபுதூர் காவல்நிலைய குற்ற எண் 600/2023 சட்டப்பிரிவு 392 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கு சொத்தான தாலியுடன் கூடிய 6 பவுன் தங்க செயின் ஒன்று, 3. எடமலைப்பட்டிபுதூர் காவல் நிலைய குற்ற எண் 1091/2023 சட்டப்பிரிவு 394 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட சுமார் ஒன்றரை பவுன் அறுந்த நிலையில் உள்ள தங்கச் செயின் ஒன்று ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ** 30 ஆகும். **வீச்சரிவாளுக்கான கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ** 31 ஆகும். **பணம் ரூ.250000/- மற்றும் எடமலைப்பட்டிபுதூர் காவல்நிலைய வழக்குச் சொத்துக்களுக்கான கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ** 32 ஆகும். பின்னர் எதிரியை நிலையம் கொண்டு அன்றைய தினமே நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினேன்.

10 அதன்பின்னர் 25.11.2023 அன்று இரவு 7 மணியளவில் எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் காந்திமார்க்கெட் உப்புப்பாறை அருகில் நின்று கொண்டிருந்த இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு எதிரியான படையப்பா என்பவரை காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக அச்சுறுத்தலும் ஆசை வார்த்தையும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராமச்சந்திரன், செல்வம் ஆகியோர் முன்னிலையில் 7.15 மணி முதல் 8 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

11. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி வடக்கு தாராநல்லூரில் உள்ள காமராஜர் நகரில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று வீட்டின் பின்புறம் முட்புதரில் மறைத்து வைத்திருந்த ரூ.2 லட்சம் பணத்தை சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ** 33 ஆகும். **கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ** 34 ஆகும். பின்னர் அன்றைய தினமே எதிரியை நிலையம் கொண்டு வந்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினேன்.

12. வழக்கு சொத்துக்களை படிவங்கள் 91 மூலம் தனித்தனியாக அனுப்பி வைத்தேன். **13.09.2023 ம் தேதியிட்ட பணம் ரூ.1 லட்சம் மற்றும் Yamaha R15 Blue Colour பதிவெண் இல்லாத இருசக்கர வாகனத்திற்கான படிவம் 91 அதசாஆ** 35 ஆகும். **27.09.2023 தேதியிட்ட பணம் ரூ.5 லட்சத்திற்கான படிவம் 91 அதசாஆ** 36 ஆகும். **29.09.2023 தேதியிட்ட சுமார் ரூ.20,60,000/-க்கான படிவம் 91 அதசாஆ** 37 ஆகும். **05.10.2023 தேதியிட்ட 1. பணம் ரூ.2,50,000/-, 2. சுமார் 36 செமீ நீளமுள்ளதில் 10 செமீ மரக்கைப்பிடி கொண்ட அரிவாள் ஒன்று ஆகியவற்றுக்கான படிவம் 91**

**அதசாஆ 38** ஆகும். **25.11.2023 தேதியிட்ட பணம் ரூ.2 லட்சத்திற்கான படிவம் 91 அதசாஆ 39** ஆகும். பணம் மொத்தமாக ரூ.31,10,000/−க்கான ரூ.500/− தாள்களின் புகைப்படங்கள் 32 எண்ணிக்கை ஏற்கனவே அதசாஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வீச்சரிவாள் ஏற்கனவே அதபொசா1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கேமரா பதிவுகள் கொண்ட Pendrive ஒன்று ஏற்கனவே அதசாஆ 20 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வீச்சரிவாளுக்கான புகைப்பட நகல் ஏற்கனவே எதசாஆ 1 ஆக 05.04.2025 ம் தேதி குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதசாஆ 20 Pendrive ல் இருசக்கர வாகனம் Yamaha R15 நீலநிற வாகனத்திற்கான புகைப்பட நகல் அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, **இருசக்கர வாகனம், ஆட்டோ மற்றும் எதிரிகளின் புகைப்படங்கள் மற்றும் சிசி டிவி Footage புகைப்படங்கள் 11 எண்ணிக்கை அதசாஆ 40** ஆகும்,

13. 01.01.2024 அன்று சிசிடிவி கேமரா நிபுணர் தலைமை காவலர் 452 சவுகத் அலி மற்றும் இந்த வழக்கில் உடன் வந்த பெண் உதவி சார்பு ஆய்வாளர் விஜயா, அசா2 ஷாஜஹானுக்கு சிகிச்சை அளித்த டாக்டர் சசிக்குமார், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் செந்தில்குமார் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் சட்டப்பிரிவு 392, 397 இதச விலிருந்து 120 பி, 392, 397 இதசவாக சட்டப்பிரிவு மாற்றம் செய்து அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அதசாஆ 41** ஆகும். 01.01.2024 அன்று எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 120 பி, 392, 397 இதச ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் சான்றுப் பொருளின் புகைப்படம் எதசாஆ1 தான் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருள் அதபொசா1 ற்கும் எதசாஆ1 புகைப்படத்தில் உள்ள அரிவாளுக்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரிதான், ஆனால் சிசிடிவி பதிவுகளை ஆராய்ந்து பார்த்தால் தான் தெரியும். இரண்டுமே இந்த வழக்கிற்காக என்னால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. அதபொசா1 அரிவாள் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் 1வது எதிரி ஜாகிர் உசேனிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. எதசாஆ1 புகைப்படத்தில் உள்ள அரிவாள் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் 1வது எதிரி ஜாகிர் உசேனிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. இரண்டு வெவ்வேறு அரிவாள்கள் 1வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் ஒரு அரிவாள் தான் கைப்பற்றப்பட்டது. அதபொசா1 அரிவாள் வேறு வழக்கிலிருந்து இந்த வழக்கில் மாறி வந்துள்ளதா என்றால் நான் சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து தான் கூறமுடியும். அதுவரையில் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட அரிவாள் எது என்று உறுதியாக சொல்லமுடியாது என்றால் சரிதான்.

3. கன்டோன்மென்ட் காவல்நிலையத்தில் குற்றப்பிரிவு, சட்டம் ஒழுங்கு என இரண்டு பிரிவுகள் உள்ளன என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கன்டோன்மென்ட் குற்றப்பிரிவு வழக்கு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இரண்டு காவல்நிலையங்களுக்கும் பொதுவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதால் முதல் தகவல் அறிக்கையில் குற்றப்பிரிவு என்று குறிப்பிடப்படவில்லை.

4. கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் யாருடையது என்று ஏதேனும் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், அது கரூரிலிருந்து திருடப்பட்ட வாகனம் ஆகும். அந்த திருடப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் யார் என்றோ முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றோ விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த வழக்கு விபரங்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் மோட்டார்சைக்கிள் விபரங்கள் எதுவும் விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை என்பதால் தான் அதுகுறித்து இந்த வழக்கில் சாட்சிகளாகவோ சான்றாவணங்களாகவோ இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கில் ஆட்டோவை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேனா என்றால் இல்லை. ஆட்டோவின் புகைப்படத்தில் ஆட்டோவின் பதிவெண்ணோ மற்ற விபரங்களோ தெளிவாக இல்லை என்றால் சரிதான். ஆட்டோவின் புகைப்படம் இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டது இல்லை என்றால் சரியல்ல.

6. சிசிடிவி பதிவுகளின் அடிப்படையில் தான் எதிரிகளை சந்தேகத்தின் அடிப்படையில் உறுதி செய்தேன் என்றால் சரிதான். சிசிடிவி பதிவுகளில் இருந்த நபர்கள் யார் என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா அல்லது எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தெரிந்து கொண்டேனா என்றால் விசாரணையில் தெரிந்து கொண்டேன். யாரை விசாரித்து எதிரிகள் தான் சிசிடிவி பதிவுகளில் உள்ளவர்கள் என்று தெரிந்து கொண்டேன் என்றால் 3வது எதிரி சூர்யாவிடமிருந்து தெரிந்து கொண்டேன். சூர்யா இந்த வழக்கில் சம்மந்தப்பட்டவர் என்பதை எதன் அடிப்படையில் தெரிந்து கொண்டேன் என்றால் சிசிடிவி பதிவுகளின்

மூலம் தெரிந்து கொண்டேன். சூர்யாவின் புகைப்படம் சிசிடிவி பதிவுகளில் உள்ளதா என்றால் உள்ளது, நாங்கள் தேடிவந்த இருசக்கர வாகனம் எதிரி சூர்யாவின் வீட்டின் அருகில் இருந்ததால் விசாரணை செய்து இவ்வழக்கில் எதிரியாக சேர்த்தோம். 3 வது எதிரி சூர்யாவை சம்மன் சார்வு செய்து விசாரணை செய்தேனா என்றால் ஆமாம். அந்த சம்மன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. 3 வது எதிரி சூர்யாவிற்கு சம்மன் சார்வு செய்த நகல் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டால் எதிரிகளுக்கு ஆதரவாக அமையக்கூடும் என்பதால் சம்மன் நகலை இணைக்கவில்லை என்றால் சரியல்ல.

7. 3 வது எதிரி சூர்யாவின் ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் இருசக்கர வாகனம் யார் மூலமாக கைப்பற்றப்பட்டது என்றால் எதிரி சூர்யா மூலம் கைப்பற்றப்பட்டது. அந்த இருசக்கர வாகனம் Yamaha R15 என்றால் சரிதான். சம்மன் சார்வு செய்து விசாரித்த போது வாக்குமூலம் எதுவும் பதிவு செய்தேனா என்றால் ஆமாம். Yamaha R15 சூர்யா வீட்டில் நிற்கிறது என்ற தகவலை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் சிசிடிவி பதிவுகளை ஆராய்ந்து அதை தொடர்ந்து சென்றதால் தெரிந்து கொண்டேன். ஆராய்ந்து தொடர்ந்து சென்ற சிசிடிவி பதிவுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளோம். சூர்யா வீட்டின் அருகில் வசிக்கும் நபர்களை இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளாகவோ கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளாகவோ அழைத்தோமா என்றால் இல்லை. சிசிடிவி பதிவுகளில் உள்ள நபர்கள் மற்றும் இரு சக்கர வாகனம் ஆகியவைகளை எதிரிகளுடன் மற்றும் கைப்பற்றப்பட்ட வாகனங்களுடன் ஒப்புமை படுத்தி எதிரிகளும் சான்று பொருட்களும் ஒன்று தான் என்று உறுதி செய்ய தடய

அறிவியல் துறை மூலம் விசாரணை செய்து உறுதி செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஆமாம். அந்த அறிக்கை இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். தடய அறிவியல் துறை அதிகாரிகளை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை, நான் தடய ஆய்விற்கு உட்படுத்தவில்லை. வழக்கிற்கு பாதகமாக கூடும் என்பதால் தடய அறிவியல் ஆய்விற்கு உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

8. இந்த வழக்கின் எதிரிகள் குறித்து எந்த சாட்சிகளும் எதிரிகளை கைது செய்வதற்கு முன்பு வரை அவர்களது வயது, அங்க அடையாளங்கள் குறித்து விசாரணையில் சொல்லவில்லை என்றால் முதல் மற்றும் 2வது எதிரிகள் பற்றி புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டதா என்றால் இல்லை. அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டால் வழக்கிற்கு பாதகமாகி விடும் என்பதால் அந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

9. வரைபடத்தில் சம்பவ இடம் சாலையின் எதிர்புறமாக வரும் பகுதியில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் வரவேண்டிய சாலையில் வராமல் எதிர்புற சாலையில் one way–ல் வந்தார்களா என்றால் அவர்கள் சரியான சாலையில் தான் வந்தார்கள். சம்பவ இடமாக வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் சரியா என்றால் சரிதான். பாலக்கரையிலிருந்து வந்து அதற்கு எதிர்புற திசையில் திரும்பிச் செல்கிறார்களா என்றால் பாலக்கரையிலிருந்து தலைமை தபால் நிலையம் வரும் வழியில் சிக்னலில் நிற்கும்போது இந்த குற்றச் சம்பவம் நடந்ததால் ஆட்டோ ஓட்டுநர் பதற்றத்தில் அங்குஇருந்த இடைவெளியில் மறுபுறத்திற்கு ஆட்டோவை திருப்பிவிட்டார், அந்த இடத்தில் பணம்

கொள்ளையடிக்கப்பட்டதால் மாதிரி வரைபடத்தில் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறேன். மேற்சொன்ன விபரங்கள் வழக்கு விசாரணையில் தெரியப்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு செல்லாமல் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தில் உள்ள தவறுகளை சரிசெய்ய வேண்டி மேற்சொன்ன விபரங்களை தற்சமயம் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. எந்த எதிரி ஹெல்மெட் அணிந்திருந்தார் என்றால் 2 வது எதிரி பாபு (எ) மிட்டாய் பாபு அணிந்திருந்தார். அவர் அணிந்திருந்ததாக சொல்லப்படும் ஹெல்மெட் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதற்கு எந்தவித குறிப்பிட்ட காரணமும் இல்லை என்றால் சரிதான். சூர்யா யாரிடமிருந்து ரூ.5 லட்சம் வாங்கித் தருவதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் கோகிலாவிடமிருந்து வாங்கித் தருவதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். கோகிலா வீட்டிற்கு சென்றோமா என்றால் சென்றோம். கோகிலாவிடம் சூர்யா சொன்ன விபரத்தை சொல்லி விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். என் விசாரணையில் கோகிலா என்ன சொன்னார் என்றால் சூர்யா ரூ.5 லட்சம் பணத்தை தன்னிடம் கொடுத்து வைத்திருப்பதாக கூறினார். கோகிலாவிடம் அந்த பணம் எங்கே என்று கேட்டேனா என்றால் கேட்டேன். கோகிலா என்னிடம் என்ன சொன்னார் என்றால் அந்த பணம் சூர்யா என்னிடம் கொடுத்தது அதை நான் சூர்யாவிடமே கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார்.

11. கோகிலா வீட்டின் எந்த பகுதியிலிருந்து பணத்தை எடுத்து வந்து சூர்யாவிடம் கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. கோகிலாவை இந்த வழக்கில் எதிரியாகவோ சாட்சியாகவோ சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக கற்றறிந்த அரசு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கை ரேகை / கையெழுத்து இட்டார்.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.08.10 17:28:37 +0530

உதவி அமர்வு நீதிபதி/தலைமை
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருச்சிராப்பள்ளி.